தோழமையா?
விரோதமா?

XA: 222

மறைமலை அடிகள் நூல் நிலையம்
MARAIMALAI ADIGAL LIBRARY
MADRAS-1
சென்னை-1

அறிஞர் அண்ணாதுரை

மறுமலர்ச்சி நூல் நிலையம்
18, ஆயலூர் முத்தையா முதலி தெரு,
சென்னை - 1.

பதிப்புரிமை
1-பதிப்பு ஏப்ரல் 1950
2 ம் பதிப்பு நவம்பர் 1950

A2 450-A

விலை 0·4 0

பதிப்புரை

சென்னையில் ஜனவரி 22, 23 ஆகிய இரண்டு நாளிலும் நடைபெற்ற திராவிட முன்னேற்றக் கழக மாநாட்டில் திரு சித்தய்யன் அவர்கள் தலைமையில் அறிஞர் சி என். அண்ணாத்துரை அவர்கள் ஆற்றியசொற்பொழிவை, மக்களனைவரும் படித்துப் பயன் பெற நூல் வடிவில் தந்துள்ளோம்.

இதனைக் குறித்துத் தந்த தோழர் அன்புப் பழம் நீ அவர்களுக்கும், திருத்தி ஒழுங்கு செய்த இரா. நெடுஞ்செழியன் அவர்களுக்கும் எங்கள் உளங்கனிந்த நன்றி உரித்து.

—பதிப்பகத்தார்.

அன்பன் அச்சகம்,
சென்னை-1.

தோழமையா? விரோதமா?

1

தோழர்களே!

சென்னை மாவட்ட முதல் மாநாடாகக் கூடும் இந்த மாநாட்டில் கலந்துகொண்டு ஊக்கமும் உற்சாகமும் காட்டி நிற்கும் உங்களைக் கண்டு மகிழ்ச்சியடைகிறேன்.

நாம் நாட்டிலேதான் வாழுகிறோமென்றாலும் நாம் கூடியிருப்பது சிங்கம், புலி, கரடிகளுக்கிடையே இந்தப் பக்கம் சர்க்கஸ். பின்புறம் மிருகக் காட்சிசாலை இவைகளிலே மிருகங்கள், அவற்றிற்கிடையே நாம் இருக்கிறோம். நாட்டின் பெருங்குடி மக்களின் அரசியல் வாழ்வும் அப்படித்தானிருக்கிறது.

நல்லதோர் எதிர்காலம்!

திராவிடர் கழகத்தைவிட்டு விலகிய பிறகு, சென்னையில் கூடும் முதல் மாநாடு இதுவேயாகும் திராவிட முன்னேற்றக் கழகத்திற்கு நாட்டில் நல்லாதரவு கிடைத்து வருகிறது என்பதற்கு அதற்கு ஏற்பட்டிருக்கும் நாளுாற்

றுக்கு மேற்பட்ட கிளைக்கழகங்களே போதிய எடுத்துக் காட்டாகும். இதுவரை 330-க்கு மேற்பட்ட மாபெரும் பொதுக்கூட்டங்கள் நடைபெற்றிருக்கின்றன. பிரசார மணிகளென விளங்கும் பலரும் ஆங்காங்குச் சென்று கொள்கை விளக்கம் கூறிவருகின்றனர். இவையெல்லாம், முன்னேற்றக் கழகத்திற்கு நல்லதோர் எதிர்காலம் இருக்கிறது என்பதை உறுதிப்படுத்துகின்றன.

திராவிடக் கழகத்தாரிடம் நமக்குப் பகையில்லை. எந்த இடத்திலும் நான் பகையுணர்ச்சியைக் காட்டியதில்லை. திராவிடக் கழகத்திலிருந்து பிரியும் வாய்ப்பை வைத்துக்கொண்டு வேறுவழியில் புக எனக்கு நான்கு சந்தர்ப்பங்கள் கிடைத்தன,

ஒன்று இதைச் சாக்காக வைத்துக்கொண்டு வேறு அரசியலில் புகுவது. மற்றொன்று இதைச் சாக்காக வைத்துக்கொண்டு எனக்கு லாபம் கிடைக்கும் வேறு வழியில் புகுவது.

மூன்றாவது திராவிடர் கழகத்தை கைப்பற்றுவது, ஆகிய இந்த மூன்று சந்தர்பபங்களையும் விட்டுவிட்டு நாலாவதாக நாட்டு மக்களின் நலிவைப் போக்குவதற்காக, திராவிட முன்னேற்றக் கழகத்தைத் துவக்கினேன். இலாப நஷ்டம் தெரியாதவனல்ல நான். கோட்டை கொத்தளங்களை அறியாதவனல்ல நான்.

திராவிட முன்னேற்றக் கழகம் நாட்டிலே நல்லறிவுப் பிரசாரத்தைச் செய்துவருகிறது. புதியதோர் எழுச்சியை, புதியதோர் புத்துணர்ச்சியை நாட்டிலே உண்டாக்கியிருக்கிறது. திராவிட முன்னேற்றக் கழகத்திலுள்ள வாலிபர்கள் பார்ப்பனியின் ஈட்டிமுனைகள்; கண்ணும் கருத்துமாய் காரியத்தைச் சாதிக்கவல்லவர்கள்; செப்பியதைச் செயலிற் காட்டும் செம்மல்கள்; சுபாவத்தில் சோம்பேறி

களல்ல; திராவிட நாட்டிலே புதியதோர் சக்தியை உண்டாக்கவல்லவர்கள்.

பணம் படைத்த பலர்!

திராவிடக் கழகத்திலிருந்து பிரிந்ததும்,பலரிடம் தவருன கருத்து ஏற்பட்டது. அந்தத் தவருன கருத்தைத் தரைமட்டமாக்கி திராவிட முன்னேற்றக் கழகத்தைத் துவக்கினேம். முதலில் நாம் துவக்கியபோது நம்மிடம் பத்திரிகை இல்லை. அச்சகம் இல்லை. ஒரு கட்சி ஏற்படுவதற்கு வேண்டிய சாதனங்கள் எதுவும் நம்மிடம் இல்லை! நம் கழகத்தில் பணம் படைத்தவர் பலர் உண்டு, ஆனல் அந்தப் பணம் இந்தக் காரியத்துக்குப் பயன்படாது. பணபலமில்லாமல் பத்திரிகையை நடத்திவருகிறேம். மெஷின் இல்லாமல் அச்சகம் வைத்திருக்கிறேம். ஒரு கட்சிக்கு வேண்டிய சாதனங்கள் பல இல்லாமலே நாம் காரியத்தைச் சாதிக்க முடியும்.

திருச்சிக்கருகே தவுட்டுப்பாளையம் என்ற அழகிய கிராமம் இருக்கிறது. அக் கிராமத்தின் அருகே காவிரிக் கரை. அங்கே இரவு 12-மணி வரை கூட்டம். இரவு 12-மணிக்குமேல் அங்கே படுத்திருந்து காலையில் சிறியதோர் தோணியில் ஆற்றைக் கடந்து அக்கரையை அடைந்தோம். இக்கரையில் இரவு 10 மணிக்குக் கூட்டம் அக்கரையிலே மறுநாள் காலை 11-மணிக்குக் கூட்டம் இதற்கிடையிலே அழகான காவிரி ஓடுகிறது.

நம் படை சாதனை

சர்க்காரால் சாதிக்க முடியாத காரியங்களையெல்லாம் நம் படை சாதிக்கும். நம் படையால் சாதிக்க முடியாத காரியங்களே இல்லை! நாட்டிலே புராண அறிவைப் போக்கி, சனுதனச் சனியனை ஒழித்து நல்லறிவுப் பிரசாரத்தைச் செய்ய நம் சர்க்காரிடமோ பணம் இல்லை!

மாகாண சர்க்கார் டெல்லி சர்க்காரைப் பணம் கேட்டால் இல்லை! இல்லை! என்ற பதிலே வருகிறது. காவிரியைக் காட்டி, தாம்பிரபரணியைக் காட்டி, வைகையின் வளத்தைக் காட்டி நம்முடைய சர்க்கார் 6 கோடி டெல்லியைக் கடன் கேட்டும் இல்லை என்ற பதிலே வந்தது. டெல்லி சர்க்காரிடம் எங்களைக் கடன் கேட்க அனுப்பவேண்டாம். கடமையை ஆற்ற அனுப்பட்டும்! சர்க்காரால் செய்யமுடியாத காரியத்தை நாங்கள் செய்து காட்டுவோம். டெல்லி சர்க்காரிடம் போராட எங்களை அனுப்புமா சர்க்கார்?

தென்றலும் புயலும்

நம்முடைய சர்க்கார் தென்றலைப் பயன்படுத்தினால் அது தென்றலாகவே இருக்கும். தென்றலைப் பயன்படுத்தாமல் விட்டால், தென்றல் புயலாக மாறும். பூந்தோட்டத்திலே தென்றலை உலாவவிட்டால் நாட்டு மக்களுக்கு நல்ல இன்பம் கிடைக்கும் தென்றலைப் புயலாக்கிய சியாங்கேய்ஷேக் என்ன ஆனார்? ஹிட்லர் என்ன ஆனார்? உருமாறிப் போனாரே! முசோலினியின் கதி என்ன ஆயிற்று? தென்றலைப் புயலாக்கிய காரணத்தால் சியாங் கேய்ஷேக் பார்மோசா தலைநகரிலே ஒளிந்துக்கொண்டு வாழ்கிறார். தென்றலைப் புயலாக்கிய சியாங்கேய்ஷேக் சிந்தனை குழம்பியிருக்கிறார் இப்போது.

நாங்கள் ஓட்டு வேட்டையிலே ஈடுபடாதவர்கள். தென்றலைப் புயலாக்க சர்க்கார் விரும்புகிறார்களா? தென்றலைப் புயலாக்க சர்க்கார் விரும்பினால் நாம் சர்க்காரைக் கேட்க விரும்புவது இதுதான். மனோன்மணீயம் ஆசிரியர் சுந்தரம்பிள்ளை சொல்லியதுபோல "இப்படை தோற்கின் எப்படைஜெயிக்கும்?" என்றுதான் கேட்போம். எங்களுக்குத் தெரியாதா?

1942-ல் இரயிலைக் கவிழ்த்ததைப்போல நமக்கு

கவிழ்க்கத் தெரியாதா? தந்திக் கம்பிகளை அறுக்கத் தெரியாதா? நன்றாகத் தெரியும். ஆனால் அந்த அழிவுச் சக்தியிலே நமக்கு விருப்பமில்லை என்று பல இடங்களிலே ஒளிவு மறைவு இன்றி சொல்லியிருக்கிறேன். அழிவுச் சக்தியில் விருப்பமில்லாத எங்களை சர்க்கார் பயன்படுத்தினால் ஆக்க சக்திக்கு வழிகோலலாம்.

இங்கே சிங்கங்கள் இருக்கும்போது, மயில்கள் சொந்த நாட்டிலே இருக்கும்போது, நம் சர்க்காருக்குக் கவலை ஏன்? திராவிட முன்னேற்றக் கழகத்தைத் துவக்கிய அன்றே புதியதோர் பொறுப்பு நமக்கு ஏற்பட்டிருக்கிறது

ஆரியமாயை வழக்குக்காக பலமுறை முக்கியமான அலுவல்களை யெல்லாம் விட்டுவிட்டு திருச்சிக்கு சென்று வருகிறேன். அடிக்கடி வாயிதா போடுகிறார்கள். கம்பராமாயணசீலர் கலாரசிகர் தோழர் பாஸ்கரத் தொண்டைமானை தான் இந்த வழக்கை விசாரிப்பதற்காக ஏற்படுத்தியிருக்கிறார்கள். ஆரிய மாயைக்கு அவர்கள் தடைவிதித்து என்னைச் சிறையில் தள்ளினால், மறுநாளே ஆயிரக்கணக்கான துண்டுப்பிரசுங்கள் மூலம் ஆரியமாயை அச்சாகி எங்கும் பறக்குமே!

சர்க்கார் இப்பொழுது ஆரியமாயை, இலட்சிய வரலாறு, இராவண காவியம் போன்ற நல்ல நூல்களைப் படித்துவருவது பற்றி மிகவும் மகிழ்ச்சியடைகிறேன்.

"அண்ணாத்துரை உள்ளதைத்தான் எழுதினான்" என்பது அவர்களுக்கு நன்கு தெரிந்ததே. சர்க்கார் நூல்களின் மீது தடைவிதிப்பதை விட்டு விட்டு முக்கியமாக செய்யவேண்டிய காரியங்களில் ஈடுபடுவது நல்லது.

செய்யவேண்டிய காரியங்கள்

இராமநாதபுரம் ஜில்லாவில் சுற்றிப்பார்த்தால் ஆடு மாடுகளெல்லாம் எலும்பும் தோலுமாய் காணப்படு

கின்றன. அவைகளெல்லாம் சுடுகாட்டுக்குப் போகும் நிலையில் இருக்கின்றன. வயல்களெல்லாம் வெடித்துக் காணப்படுகின்றன. கதிர்களெல்லாம் காய்ந்து வயல்களிலே மடிந்து கிடக்கின்றன. மக்களிடம் அரிசியில்லாத குறை. வேலையில்லாதகுறை. ஆடையில்லாதகுறை. பசித் தீவினை. இத்தனையும் நீக்கவேண்டிய பொறுப்பு நம் சர்க்காருக்கு இருக்கிறது. இந்த ஏழ்மை நிலை வளர்ந்தால் வங்காளத்தில் வந்த பஞ்சம் இங்கு வந்துவிடுமோ என்று வருந்துவதாக ஒரு பெரியார் கூறியுள்ளார். பஞ்சம் எல்லா ஜில்லாக்களிலும் வரக்கூடும் என்று எல்லா ஜில்லா கலெக்டர்களும் அரசாங்கத்துக்குத் தெரிவித்து விட்டார்கள். இந்த அவல நிலையைப் போக்கும் மார்க்கத்தைத் தேடாமல், அடக்குமுறைப் பாணத்தை வீசிப்பலன் என்ன காணமுடியும்?

ஏழையின் கண்ணீர்!

வரியை வாங்கும் சர்க்கார் இனி என்ன செய்யப் போகிறது? ஏழைகள் புனல் சொரிகிறார்கள்! ஏழைகள் சொரியும் கண்ணீர் செந்நீராகமாறி, பின்னர் புரட்சியாக மாறும் என்பதைச் சர்க்கார் உணர்வார்களா? புரட்சித் தீயில் ஏராளமான சாம்ராஜியங்கள் வீழ்ந்து மண்ணானதை சரித்திரத்தைப் புரட்டிப் பார்த்தால் நன்கு தெரியும் அறிவான வேலையை நாட்டிலே உள்ள சர்க்கார் செய்யவேண்டும்.

கைத்தறி நெசவாளர்கள் கையைத் தலையணையாக வைத்துக்கொண்டு படுத்துக் கிடக்கிறார்கள். அவர்களின் உழைப்பில் மண் விழுந்துவிட்டது. பஞ்சாலைகளிலே உள்ள ஆலைத்தொழிலாளர்களுக்கு ஆலையிலே பஞ்சு கிடைக்காத காரணத்தால் ஆலை முதலாளிகள் நோட்டீஸ் கொடுத்திருக்கிறார்கள். 200-ம் நம்பர் நூலைப்பார்த்த கை, அழகிய டைமண்ட் சேலையை நெய்தகை, சரிகை பட்டு

இவைகளைத் திரித்த பொன் கை, இன்று பவானி அணைக் கட்டின் தண்ணீர்த் தேக்கத்திலே வேலை செய்கிறது. அங்கு வேலை செய்யும் தமிழ்த் தோழரிடையே நாம் சென்று உன் தகப்பன் பெயர் சேரன், செங்குட்டுவன், பாண்டியன் என்று அடிக்கடி கூறியுள்ளோம். நம் இனத்தார் ஒருகாலத்திலே நாட்டை ஆண்டவர்கள் என்றும் கூறியுள்ளோம்.

சிந்தைக்கு விந்தை !

நம்முடைய சர்க்காரின் போக்கு என் சிந்தைக்கு விந்தையாகவே இருக்கிறது. பொங்கல் விழாவுக்கு சி. ஐ டி. களை அனுப்புகிறார்களே நம் சர்க்கார் பதவிப்பானையிலே, ஆணவ நீரை ஊற்றி அறியாமை அரிசியைப் போட்டு, கோபத் தீயிலே பொங்கலிடுகிறார்கள் சர்க்கார். அதிலிருந்து பொங்கலா கிடைக்கும்? நாங்கள் ஜனநாயகப் பானையிலே அன்பெனும் நீர் ஊற்றி, அறிவுச் சோறாக்கி இனிய பொங்கலைத் தருகிறோம் மக்கள் ஏற்றுக் கொள்ளுகிறார்கள்.

மறைமலை அடிகளார், வேதாசலம் என்ற பெயரை மாற்றி அமைத்துக்கொள்வதால் தமிழர்கள் வெறியர்கள் என்று சொல்லுகிறார் மந்திரி மாதவமேனன். மலையாள மாதவமேனனார் தமிழின் தன்மையை, சிறப்பை, அழகை உணர்வாரா?

இப்பொழுது ஸ்ரீலஸ்ரீ, ஸ்ரீஜத், ஸ்ரீமான் இவைகளை நீங்கள் எங்கேயாகிலும் கேட்க முடிகிறதா? ஆயிரக்கால் மண்டபங்களிலே நூற்றுக்கால் மண்டபங்களிலே வேண்டுமானாலு கேட்கலாம். மக்கள் மன்றத்திலே நீங்கள் இச்சொற்களைக் கேட்க முடியாது. 6, 7 ஆண்டுகளுக்கு முன்னே — ஸ்ரீ சத்தியமூர்த்தி, ஸ்ரீஜத் இராஜகோபாலாச்சாரியார் ஸ்ரீமான சீனுவாச ஐயங்கார் என்றிருந்தது

இப்பொழுது அப்படி யாரேனும் சொல்லுகிறார்களா இல்லையே! ஏன்? சுதேசமித்திரன் பத்திரிகையே தன்னுடைய பழைய முறையை மாற்றி அமைத்துக்கொண்டு சத்தியாக்கிரகத்துக்கு அறப்போர் என்று எழுதுகிறதே! சேனாபதி என்பதைத் தளபதி என்று எழுதுகிறதே! நாம் பெயரை மாற்றி அமைத்துக் கொள்ளுகிறோமென்றால், ஒரு கருத்தோடுதான் பெயரை மாற்றி அமைக்கிறோம்.

சங்கராந்தியும் பொங்கலும்

பல வருடங்களுக்கு முன்னே சங்கராந்தி பண்டிகை என்றிருந்தது. இப்பொழுது சங்கராந்தி பண்டிகை என்று சொன்னால் அப்படி ஒரு பண்டிகை இருக்கிறதா? என்று கேட்பார்கள் இப்பொழுது பொங்கல், அதுவும் தமிழர் திருநாள் என்று சொன்னால்தான் தெரியும். சங்கராந்தி என்று இருந்தபோது சூர்யபகவானுக்குப் பூஜை செய்வதோடு, ரதத்திலே சூரியன் ஏழு குதிரைகளோடு கிழக்கிலிருந்து மேற்குக்கு வருகிறான் என்று எண்ணியிருந்தார்கள். இப்பொழுது அதனை உழவர் திருநாள் என்று எவ்வளவு அழகாக மாற்றி அமைத்துவிட்டோம்.

சங்கராந்தி பண்டிகை என்றதும் ஒற்றைச் சக்கரம், தேர், ஏழு குதிரை இவைகளோடு கிழக்கிலிருந்து சூரியன் மேற்கே ஓடுகிறான் என்று தானே முன்னர் நம்பியிருந்தார்கள் இப்பொழுது பலருக்குத் தெரியுமே! பூமிதான் ஓடுகிறது சூரியன் ஓடவில்லை என்று இப்பொழுது சூரியன் கிழக்கிலிருந்து மேற்கே ஓடுகிறான் என்ற கருத்தெல்லாம் தூள் தூளாகி விடவில்லையா?

தமிழ் நாட்டிலே மகாசங்கராந்தி பண்டிகையைத் தமிழர் திருநாளாக மாற்றி இருக்கிறோமே! நம்முடைய சர்க்கார் தென்றலைப் புயலாக்க விரும்புகிறார்களா? அல்

லது தென்றலைத் தென்றலாகவே உலவவிடுவார்களா?நம்முடைய சர்க்கார் தென்றலைத் தென்றலாகவே இருக்கும்படி செய்வதுதான் நல்லது நாங்கள் விரும்பினால் புயலாக மாற்றலாம். சர்க்காரிடம் நமக்குத் தோழமையா? விரோதமா?

அறிவியக்கமும் அடக்குமுறையும்

இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்னே சாக்ரடீஸ் தோற்றுவித்த அறிவியக்கமல்லவா நம் இயக்கம். மார்டின் லூதர் போற்றிப் புகழ்ந்த அறிவியக்கமல்லவா நம் இயக்கம்? ஒரு காலத்தில் இராஜாராம் மோகன்ராய் நம் இயக்கத்திலிருந்ததுண்டு அம்பேத்கார் வடநாட்டிலே நம் இயக்க வேலையைச் செய்து வருகிறார். தமிழ் நாட்டிலே அறிவியக்கத்தைத் தோற்றுவித்தவர் பெரியார் இராமசாமி இந்த அறிவியக்கத்தை அடக்கு முறையென்னும் ஆபத்தான ஆயுதத்தால் அடக்கிவிட முடியாது.

நாம் சொல்லும் சொற்கள் மக்களிடம் செவி வழியாகச் சென்று அப்படியே நெஞ்சிலே பதிந்து இதய கீதங்களாக மாறிவிடுகின்றன. நம்முடைய நினைப்புத் திட்டங்கள் நாட்டிலே புதிய ஜீவசக்தியைத் தந்திருக்கிறது சியாங்கேஷேக் சீனாவில் இருந்தபோது மாசேதுங்கின் பெயர் யாருக்குத் தெரியும்? இப்பொழுது சியாங்கேஷேக் எங்கிருக்கிறார்? அரசியல் ஆரூடம்—ஆபத்தானது தான், அதற்காக அதைத் தள்ளிவிடவும் முடியாது. "உழவர்களே, உறங்காதீர்கள்! கிளர்ந்தெழுங்கள்! என்று ஓமந்தூராரே சொல்வார் என்று முன்னர் யாராகிலும் எண்ணியிருப்பார்களா?

ஆசாரியா கிருபலானி "திறமையற்ற சர்க்கார் வெளியே போய்விடுங்கள்" என்று பொது மேடையிலே

சொல்ல, அதை நேரு அவர்கள் எவ்வளவு பொறுமையோடு கேட்டுக் கொண்டிருந்தார்? அரசியல் நிலைமையிலே எது நேரிடும், எது நேரிடாது என்று முன்கூட்டியே சொல்ல முடியாது. நம்முடைய நோக்கமெல்லாம் அறப்போர், அறப்போர், அறப்போர்தான்! மக்களிடையே மூடப் பழக்க வழக்கத்தால் வந்த பழைய எண்ணங்களை தூக்கி எறியும் அறப்போர்! நாட்டிலே நல்லாட்சி ஏற்பட நாம் பாடுபடுவோம் என்று கூறி முடிக்கிறேன்.

2

தமிழரின் தனிப்பண்பு

இரண்டு தினங்களாக மக்களிடையே காணப்படுகிற உணர்ச்சியைக் கண்டு திருப்தி அடைகிறேன். மாநாட்டுக்குக் கட்டணம் கேட்பது பற்றி தோழர்களிலே சிலர் கோபித்துக்கொள்ளுகிறார்கள். மாநாட்டையும் கழகத்தையும் நாம் பொதுமக்களின் பணத்தைக் கொண்டுதான் நடத்தவேண்டும். நாம் கழகத்தை நடத்த, தென்னாட்டு பிர்லாக்களிடம் காவடி எடுக்கமுடியாது இரண்டாயிரம் ரூபாயைப் பணக்காரனின் பையிலிருந்து செலவழிப்பதைவிட ஏழையின் ஓட்டைப்பாக்கெட்டிலிருந்து செலவழிப்பதேமேல். அதற்குதான் சக்தியும் அதிகம். ஏழை மக்களாலேயே இந்த இயக்கம் நடைபெறுவதால் ஏழைமக்கள் தான் இதற்கும் பணம் தந்துதவவேண்டும்.

வாய்ப்புகள் பல இழந்தோம்!

இந்த நாட்டின் எதிர்கால அரசியல் நிலையை நிர்ணயிக்கும் பல சந்தர்ப்பங்கள் வந்தன. அந்தச் சந்தர்ப்பங்

களை எல்லாம் நாம் நழுவவிட்டுவிட்டோம். உதாரணமாக இத் துணைக்கண்டத்திலுள்ள பல்வேறு அரசியல் தலைவர்களின் கருத்துக்களையறிந்து ஒரு வழி காணவேண்டுமென்றஎண்ணத்தோடு சர். ஸ்டாப்போர்டு கிரிப்ஸ் வந்த காலத்தில், எல்லாத் தலைவர்களையும் அவர் சந்தித்துப் பேசி, ஒரு கருத்தை முடிவு செய்துகொண்டு டைரியை மூடிவிட்ட பிறகு, நமது தலைவர் அவரைச் சந்தித்தார் அந்தச் சந்திப்பால் பலனேதும் ஏற்படவில்லை.

தோழர் ஜின்னாவை நமது தலைவர் சந்திக்க விரும்பியபோது நான் உடன்வர மறுத்தேன் என்றும், நான் அப்பொழுதே துரோகம் செய்தேன் என்றும் சமீபத்தில் பத்திரிகையில் குறிப்பிட்டிருந்தார். நான் உடன்போக மறுத்தது உண்மைதான். தோழர் ஜின்னாவை, ஒரு திட்டமான முடிவை வைத்துக்கொண்டு பாருங்கள். வெறும் உபசாரத்திற்காகப் பார்ப்பதில் பலனேதும் இல்லை என்று சொன்னேன். தலைவருடைய சந்திப்பு வெறும் உபசாரச் சந்திப்பே என்பதை நான் அறிந்துகொண்ட காரணத்தால்தான் உடன்போக மறுத்தேன். தலைவரோடு, "சண்டே அப்சர்வர்" ஆசிரியர் தோழர் பி பாலசுப்பிரமணியம், இப்பொழுது சைவசீலராக விளங்கும் தோழர் கே எம். பாலசுப்பிரமணியம் ஆகியவர்கள் உடன் சென்றார்கள். சென்றவர்கள் மூவரும் திரும்பி வரும்போது மனக்கசப்புடன்தான் திரும்பினார்கள். சந்தர்ப்பம் அப்பொழுதும் தவறவிடப்பட்டது. தோழர் அம்பேத்காரைச் சந்தித்த வாய்ப்பும் பயனற்றே போயிற்று இப்படியாகத் தவறவிடப்பட்ட சந்தர்ப்பங்கள் ஏராளம்.

வாய்ச்சொல்லில் வீரர்கள்

நாங்கள் இதைச் செய்வோம், அதைச் செய்வோம் என்று கூறிவிட்டுப் பிறகு எதுவும் செய்யாமல் இருக்கும்

ஏமாளிகளல்ல. நாங்கள் ஏதாவது கூறுகின்றோம் என்றால், அதை அமைதியான சூழ்நிலையில் நடைமுறையில் காட்டவேண்டும் என்றே விரும்புகிறோம். காங்கிரஸ்காரர்கள் வீரம்பேசினார்கள் ஒரு காலத்தில். பிறகு எவை எவைகளுக்குத் தலைவணங்க மாட்டோம் என்றார்களோ அவற்றிற்கெல்லாம் தலை தாழ்த்தினார்கள்.

தோழர் எஸ். சத்தியமூர்த்தி அவர்கள் 1935-ஆம் வருடம் சட்டத்தை உடைக்கப் போகிறோம்'' என்று சிம்ம கர்ஜனை செய்தார். என்ன ஆயிற்று?

ஒரு சட்டத்தையும் அவர்கள் உடைக்கவில்லை! அதே சட்டத்தை வைத்துக் கொண்டுதான் மந்திரிகள் அமுல் நடத்துகிறார்கள்.

இந்த நாட்டின் முக்கியமான பிரச்னைகளை வைத்துக் கொண்டு, உங்கள் முன்னே பேசுகிறேன் ஓடுகிற ரயிலை தந்திரமாகக் கவிழ்க்க எங்களால் முடியாதா? தந்திக் கம்பியை அறுத்தெறிவது இயலாத காரியமா, என்ன? கையிலே ஒரு சுத்தியும், ஒருசிறு பேனாக் கத்தியும், நெஞ்சிலே கொஞ்சம் துணிவும், போலீஸ்காரர்களுக்கு கொஞ்சம் ஞாபகமறதியும் ஏற்படும்படி செய்துவிட்டால் போதுமே! பலாத்காரத்தால் நாட்டின் நிலையை எப்படி உயர்த்த முடியும்?

நமது சுதந்திரம் ஒரு மாடப்புறா!

கோபுரத்தின் உச்சியில் இருக்கிற மாடப் புறாவை நாம் பிடிக்க வேண்டும். மாடப்புறாவை பிடிக்க வேண்டியவன் ஒரு கால் முடவனாய் இருக்கிறான். புறாவோ நம்முடையது: கோபுரமோ மாற்றானுடையது கோபுரம் ஏற வேண்டியவனுக்கோ ஒரு கால் முடமாகிவிட்டது. ஊனமாகிய ஒரு காலை வைத்துக்கொண்டே மாடப்புறாவைப் பிடிக்க வேண்டும். அந்த மாடப்புறாவை நாம் பிடித்துத்

திராவிட சமுதாயத்தினிடம் காட்ட வேண்டும். இது தான் நம்முன் நிற்கும் பிரச்சினை

சிங்கம் புலிக்கு மத்தியிலே நாம் பேசுகிற இந்த நேரத்தில், வாஷிங்டன்னிலே இந்தியாவின் தூதுவராக அமர்ந்திருக்கும் நேருவின் ஆசைத்தங்கையும் உல்லாச மங்கையுமான விஜயலட்சுமியார் உல்லாசமாக அங்கு பேசிக்கொண்டிருப்பார். ரஷ்யாவிலோ தூதுவராக இருப்பவர் ஒரு வேதாந்தி. பிரான்சிலே ஒரு தூதுவர். இப்படி வெளிநாடுகளிலே பற்பல தூதுவர்கள் அவர்களுக்கு உண்டு.

வானத்திலே அசோகச் சக்கரக் கொடி. அலை கடலிலே மூவர்ணக் கொடி சர்க்கார் நிலையங்களிலே அவர்கள் கொடி, வெளிநாடுகளிலே கூட அந்தக் கொடி ஒய்யாரமாகப் பறந்து கொண்டுதானிருக்கிறது. இந்த நிலையை நாம் மறந்துவிடவில்லை. அவ்வளவு பெரிய சக்தியைத்தான் நாம் எதிர்த்து நிற்கவேண்டியிருக்கிறது.

திராவிட முன்னேற்றக் கழகத்தினரே! குடியரசுத் திருநாளுக்கு அழைப்பு அனுப்புகிறோம், வருகிறீர்களா? என்று அரசாங்கத்தினர் அழைப்பு அனுப்பினால், நிச்சயமாக அந்த அழைப்பை ஏற்றுக்கொள்ள மறுத்து விடுவோம்

இப்பொழுது பொதுமக்களுக்கு எல்லாம் தெரிந்திருக்கிற காரணத்தால், அரசியல் திட்டத்தை மாற்றி அமைக்கும்படி கூறுகிறோம்.

அரசியலை மாற்றுவோம்

உங்கள் மீதுதான் நான் வற்றாத நம்பிக்கை வைத்திருக்கிறேன் உங்கள் வல்லமையின் துணையால் பல காரியங்களைச் சாதிக்க முடியும் என்ற நம்பிக்கை எனக்குண்டு.

கோட்டையிலே, வானமுகட்டைத் தொட முயற்சிப்

பதுபோல், பறக்கும் அசோகச்சக்கரக் கொடியின் கீழ் நாம் அரசியல் திட்டத்தை மாற்றி அமைக்க முடியும். நாம் அரசியல் திட்டத்தை மாற்றி அமைக்கவேண்டு மானால் மூன்றில் இரண்டு பங்கு மெஜாரிட்டி இருந்தால் தான் முடியும்; நாங்கள் தேர்தலுக்கு நிற்கப்போவ தில்லை. ஆனால் சுயேச்சைக் கட்சி அன்பர்களில் பலர் நம்மவராகவே இருப்பார்கள். ஜில்லாபோர்டு தேர்தல் காங்கிரசுக்கு நல்ல பாடத்தைக் கற்பித்துக் கொடுத் திருக்கிறது. அசெம்பிளியில் தூக்கு கரத்தை என்றால் உடனே 200 பேர் கரத்தைத் தூக்க காத்துக்கொண் டிருக்கிறார்கள். இப்படி எவ்வளவு நாட்களுக்கு நடக்க முடியும் ?

அரசியல் யூகம் தெரிந்தவர்கள் எதிர்காலம் எப்படி யிருக்கும் என்பதை நன்கு கண்டுகொள்ளமுடியும், சட்ட சபையிலே இனி ஜனநாயகம் மலராமலாபோகும்? சட்ட சபையிலே விரைவில் ஜனநாயகம் மலரத்தான் போகிறது; அதை நாம் பார்க்கத்தான் போகிறோம்.

சட்டியிலே இருக்கும் மாவிலே பாதிக்குமேல் வடக்கே சென்று விடுகிறது. குறைவாக வைத்துக் கொண்டு தோசையைச்சுட முடியாது. இதை கனம் கோபால் ரெட்டியார் நன்கு உணரவேண்டும்.

கூட்டு முன்னணி அமைப்போம் !

அரசியலமைப்பை மாற்றி, அமைக்க இந்தியத் துணைக்கண்டத்திலே ஒரு கூட்டு முன்னணியை நிச்சய மாக அமைத்துத்தான் தீருவோம்.

அஸ்ஸாமிலே தேயிலை ஏராளமாக விளைகிறது. அதை வைத்துக்கொண்டுதான் அஸ்ஸாம் மாகாணம் ஆட்சி நடத்தமுடியும். அஸ்ஸாம் பிரதிநிதி "பழைய பாத்தியத்தைக்கொண்டு நாங்கள் பர்மாவிலே சேர்ந்து விட்டாலும் சேர்ந்துவிடுவோம்" என்று எச்சரிக்கை

செய்திருக்கிறார். பாகிஸ்தான் சோவியத்திலே ஒரு பகுதியாக சேர்ந்தாலும் சேர்ந்துவிடும் என்று பெரோஸ்கான் நூன் பேசியிருப்பதை நீங்கள் பத்திரிகையிலே பார்த்திருக்கலாம். அஸ்ஸாம்; வளமுள்ள வங்காளம்; ஆத்திரத்துக்குப் பெயர்போன ஆந்திரம்; மருட்சிகொண்ட மலையாளம்; இவற்றோடு தன்னிகரற்ற தமிழகம் இவற்றைக்கொண்டு ஏன் மெஜாரிடி பெற முடியாது?

இங்கு கூடியுள்ள கூட்டத்திலே போர்முனையின் ஈட்டிகளான வாலிபர்களைக் காண்கிறேன். மாநாட்டில் சிகரெட் வைத்துக்கொண்டுள்ள கைகளில் இருக்கும் சிகரெட்டுகள் எல்லாம் எனக்குக் கூர்மையான துப்பாக்கிகளாகக் காட்சியளிக்கின்றன. பெரும்பாலோர் இங்கு இராணுவ உடையிலே காட்சி அளிப்பதைக் காண்கிறேன். பலர் அழகிய திராவிடக் கொடியை ஏந்தி நிற்பதை மனக்கண்முன் காண்கிறேன்.

"தாயின் மணிக்கொடி பாரீர்—இதைத் தாழ்ந்து பணிந்து புகழ்ந்திட வாரீர்" என்று பாரதியார் தாயின் மணிக்கொடி கோட்டையிலே பறப்பதற்கு முன் தான் பாடினார். நாமக்கல் கவிஞர் "கத்தியின்றி ரத்தமின்றி யுத்தமொன்று வருகுது" என்று யுத்தம் வருவதற்கு முன்னே பாடினார்.

தமிழரின் தனிப்பண்பு

தமிழரின் சிறந்த பண்பு எனக்கு நன்கு தெரிந்திருக்கிற காரணத்தால், நம்முடைய வாழ்நாளில் நிச்சயமாக திராவிட நாட்டைக் காண்போம் என்ற உறுதி எனக்குண்டு. அந்த உறுதி உங்களுக்கும் இருக்கவேண்டும்.

ஜனவரி 26-ம் தேதி அதிருப்திக்குரிய நாள் என்ற வீரப் பரணியை திக்கெட்டும் முழக்குவோம்! ஜனவரி

26-ஆம் தேதி துக்க நாள் அல்ல. நம்மை நாம் தயார் படுத்திக்கொள்ளும் நாள்.

நரிக்கும் ஒரு புதர் இருக்கிறது! புலிக்குமொரு குகை இருக்கிறது! பாம்புக்கோ புற்று இருக்கிறது! பறவைகளுக்கோ மரக்கிளைகள் இருக்கின்றன! இப்படி இருக்க திராவிடர்கள் அனைவரும் ஒன்றுகூடி வாழ ஒரு இடம் வேண்டாமா? இதற்காக நாம் என்ன பீடுடைய பிரமாபுரி மேவிய பெம்மானைத் தேடி அலைய முடியுமா? நாம் என்ன நாட்டை ஆளத்தெரியாதவர்களா? அல்லது நாட்டை ஆண்டதுதான் இல்லையா? விந்திய மலையிலிருந்து குமரி வரை எந்தக் காலத்திலும் வடநாட்டார் ஆதிக்கம் செலுத்தியதில்லையே! சந்திர குப்தன் காலத்திலும் இல்லை. கனிஷ்டன் காலத்திலும் இல்லை. புலிகேசியின் காலத்திலும் இல்லை. அவுரங்கசீப்பால் கூட விந்திய மலைக்கு இப்பால் வர முடியவில்லையே! இவர்கள் ஆண்டதெல்லாம் விந்திய மலைக்கு அப்பால் தான். படையெடுப்புகள் நடந்திருக்கின்றன. அவைகளும் முறியடிக்கப்பட்டிருக்கின்றன. தசாவதாரம் என்றால் உங்களுக்கு நன்கு தெரியும் தசாவதாரத்திலே இரண்டே இரண்டு அவதாரங்கள்தான் மனித அவதாரம் எடுத்தது. அந்த இரண்டு அவதாரங்களும்கூட விந்திய மலைக்கு அப்பால் தான் எடுத்தன. நாடகத்திலே குறிப்பிட்டது போலத் தமிழர்களுக்கு இரண்டுதான் தெரியும். ஒன்று தோழமை; மற்றொன்று பகைமை. இவை இரண்டும் தவிர தமிழர்களுக்கு வேறொன்றும் தெரியாது. ஆனால் தமிழகத்தைத் தாக்கிப் பேசிய வடநாட்டாரை, தமிழர்கள் தான் பணியச் செய்திருக்கிறார்கள்.

திராவிட இனத்தின் மார்க்கத் துறை ஆரியரிடமும், அரசியல் டில்லியிலும், பொருளாதாரம் பம்பாயிலும்

பிணைக்கப்பட்டிருப்பதை நாம் கூறி நாலரை 3கோடி மக்களுக்கும் தனி அரசு கோருகிறோம் இதில் என்ன தப்பு?

ஐரோப்பாவிலே பிரான்ஸ் இருக்கிறது; ஸ்பெயின் இருக்கிறது; போர்ச்சுகீஸ் இருக்கிறது; லாட்வியா, லிதுவேனியா, கிரீஸ், அல்பேனியா, இத்தாலி இருக்கின்றன இவைகளெல்லாம் தனி நாடுகளாக இருக்கும்பொழுது இன்பத் திராவிடம் மட்டும் ஏன் தனிநாடாக இருக்க முடியாதா என்ன? ஐரோப்பாவிலே இருக்கும் சிறுசிறு நாடுகள் எல்லாம் திராவிட நாட்டைவிட விஸ்தீரணத்தில் பெரியதா? நம்மை நாம் காத்துக்கொள்ள திராவிட நாடு நமக்கு அவசியம் தேவை. மற்ற நாடுகளைவிட திராவிடநாடு விஸ்தீரணத்தில் பெரியது. நிலவளம் நீர்வளம், மலைவளம், மனவளம் எல்லாம் திராவிடநாட்டிலே காணலாம். இயற்கை எழில் நிரம்பிய இடங்கள் எவ்வளவோ உள்ளன; கவனிப்பாரற்று. வளமான திராவிடநாடு; அதில் வளைந்து வளைந்து செல்லும் வாய்க்கால்கள், வாய்க்கால்களுக்குப் பக்கத்தில் வயல்கள், வயல்களிலே உழவர்கள் சிந்தைக் களிப்புடன் பாடும் சிந்து, வயல்களுக்குப் பக்கத்தில் சாலைகள், சாலைகளுக்குப் பக்கத்திலே கிளி கொஞ்சிடும் சோலைகளைக் காண்கிறோம். சோலைக்கும் மற்றொரு பக்கத்திலே செவ்விளநீரைக் காண்கிறோம். அதுமட்டுமா? சாலைக்குப் பக்கத்தில் குன்றுகள், கடலுக்குள்ளே முத்து, காட்டிலே வாசனை வீசும் சந்தனம், கஸ்தூரி வகைகள், அழகிய மரம் இன்னும் எவ்வளவோ பொருள்கள் கிடைக்கின்றன. இன்பத் திராவிடத்திலோ இன்பத் தேன் வந்து பாய்கிறது. உதாரணமாக பிரான்ஸிலே நிலக்கரி கிடைத்தால் பெட்ரோல் கிடைக்காது. இங்கிலாந்திலே நிலக்கரி கிடைத்தால் தங்கம் கிடைக்காது. ஜெர்மனியில் இரும்பு

42 ASO - A

கிடைத்தால் யூரேனியம் கிடைக்காது. ஐரோப்பாவிலே உள்ள தனிநாடுகளிகளிலே இங்கு கிடைப்பது போல் எதுவும் கிடைக்காது.

புதைபொருள் ஆராய்ச்சி

இங்கு மண்ணுக்கடியில் பொன், தங்கம், நிலக்கரி. அதுமட்டுமா? நம்மைக் கண்டு அமெரிக்கா அச்சப்படும் அளவுக்கு திருவாங்கூர் பகுதியிலே அணுக் குண்டு தயாரிப்பதற்கு அவசியம் தேவையான யூரேனியம் கிடைக்கிறது. கருத்தோடு தோண்டினால் கிடைப்பதற்கு அரிய பொருள்கள் எல்லாம் கிடைக்கத்தான் செய்யும். தோண்டுவதற்கு சோம்பேறித் தனம். தோண்டினால் எவ்வளவோ பலன் கிடைக்கும். தேவையுள்ள பொருள்களுக்காக அரசாங்கத்தார் கவனம் செலுத்தித் தோண்டிப் பார்ப்பதில்லை. புதைபொருள் ஆராய்ச்சி இலாகா என்று ஒன்று இருக்கிறது. அவர்கள் தோண்டிப் பார்த்து கண்டு பிடித்தது என்ன தெரியுமா? பஞ்சமகாலிங்கம், இடது காலைத் தூக்கி ஆடும் நடராஜர், மனைவியுடன் கூடிய பிள்ளையார். இப்படித்தான் இவர்கள் கண்டு பிடித்திருக்கிறார்கள். இதற்குத் தலைவர் தோழர் இராமச்சந்திர தீட்சிதர், நாடு நலம்பட வழியா இது?

குறள் கருத்து ஒன்று இப்பொழுது எனக்கு நினைவுக்கு வருகிறது. அதாவது பாடுபட்டும் பட்டினிக் கிடப்பதைப் பார்த்து நிலமங்கை நகைக்கிறாள் என்பதாகும்.

"இலமென்று அசைஇ இருப்பாரைக் காணின்
நிலமென்னும் நல்லாள் நகும்" (குறள்–1040)

ஏ மனிதனே! டாடா கம்பெனியில் தயாராகிற ஆணியை அடித்து, ஜெர்மனியிலே அச்சாகிற சரஸ்வதி படத்தை மாட்டி, ஜப்பான் அனுப்புகிற கற்பூரத்தைக் கொளுத்தி,

அழகு பார்க்கும் பைத்தியக்காரா? இங்கே இயற்கை எழில் நிரம்பியிருக்க இங்கேயே எல்லாம் கிடைக்கும் பொழுது, எல்லாவற்றிற்கும் மேல்நாட்டை எதிர் பார்க்கிற தமிழனே! நீ நாட்டை ஆளமுடியுமா! என்று தமிழனைப் பார்த்து நிலமங்கை நகைக்கிறாள்.

கைபோனால் கண் உண்டு

வஞ்சகத்தாலே, சூதாலே வடநாட்டார் தமிழகத்தில் ஆதிக்கம் செலுத்தியிருக்கலாம். வாள் எடுத்தவன் தமிழன் தான் பணியத்தான் வேண்டும். நாங்கள் எங்கள் கட்டை விரலை வெட்டிப் போடுகிற வரையில் எழுதிக் கொண்டே தானிருப்போம். நாக்கின் நுனியை நறுக்கிப் போடுகிறவரை பேசிக்கொண்டேயிருப்போம், கட்டை விரலையும் நாக்கையும் வெட்டிப் போட்டாலும், வாயை விட கண் அழகாகப் பேசுமே! பேசாமலா போகும்?

நேருவைக் கேட்கிறோம்

ஒரு பிச்சைக்காரன் நடந்து செல்கிறான். மற்றொருவன் மெருகு கலையாத மோட்டார் காரில் செல்கிறான். அப்பொழுது பிச்சைக்காரன்மீது உங்கள் கண்ணோட்டத்தை விட்டால், பிச்சைக்காரனின் கண்கள் அவனுடைய வறுமையைப் பற்றி நன்றாகப் பேசுவதைக் காணலாமே! நம்முடைய நோக்கத்தின்படி நமக்கு வசதிகள் செய்து திராவிடநாட்டை தனியே தரும்படி கேட்கிறோம். யாரை? நேருவைக் கேட்கிறோம்! உலக சரித்திரம் தெரிந்த நேருவைக் கேட்கிறோம்! பூகோளம் அறிந்த நேருவைக் கேட்கிறோம்! திராவிடநாடு தனியாக இருந்தால் ஆபத்து வராதா? என்று கேட்கலாம். திராவிட நாடு தனி அரசாக—தனி நாடா இருக்கும்பொழுது ஆபத்து வந்தால் அதைத் தடுக்க ஏன் இயலாது?

நாங்கள் போர்வீரர்கள்

சைனுவுக்கு ஆபத்து வரும்பொழுது நேரு சர்க்கார் உதவ வில்லையா ? சீன நாள் கொண்டாடவில்லையா ? ஸ்பெயின் நாள் கொண்டாடவில்லையா ? காஷ்மீர் போராட்டத்திலே இரத்தம் சிந்திய மாவீரர்கள் யார் ? பெரும்பாலவரான திராவிட வாலிபர்கள் தானே காஷ்மீரில் இரத்தம் சிந்தியிருக்கிருர்கள். தமிழ்நாட்டுப்போர் வீரர்கள் தான், போரென்ருல் முன்னணியில் நின்று உயிரைத் தருபவர்கள். ஹோம்ரூல் சண்டை நடந்த பொழுது தமிழ்நாட்டுப் போர் வீரர் தான் முன்னணியில் நின்ருர்கள். நைல் நதிக்கரையிலே, எகிப்திலே, பிரான்சிலே ஜெர்மனியிலே யெல்லாம் போர் நடந்தபொழுது தமிழ் நாட்டு விரர்கள் தான் இரத்தத்தைச் சிந்தியிருக்கிருர்கள். நாங்கள் விரும்பிஞல் ஒரு பெரிய போர்ப் படைடை அமைக்கலாமே! வெளி நாடுகளுக்கெல்லாம் சென்று திரும்பி யிருக்கும் போர்வீரர்களை ஒருங்கு சேர்த்து ஒரு பட்டாளத்தை அமைக்க எங்களால் முடியாதா ? ஏன் முடியாமல் போய்விடும் ?

கப்பல்கட்டி வாழ்வோம்

நாங்கள் விரும்பிஞல் எங்கள்நாட்டிலே ஒரு I. N. O—U. N. O. வைப் போல அமைக்க முடியாதா ; என்ன ?

பெருங்காற்று அடிக்கும்பொழுது காட்டிலே உள்ள நல்ல மரங்களெல்லாம் "எங்களை என்றும் மரங்களாகவே வைத்திருக்கிறீர்களே! தயை செய்து எங்களைப் பயன்படுத்தி, அழகிய கப்பல்களைக் கட்டி விட்டால் அலை கடலிலே உல்லாசமாக மிதந்து செல்வோமே" என்று நம்மைப் பார்த்துக் கேட்கிறது. நாங்கள் விரும்பிஞல் அழகிய கப்பலைக் கட்டமுடியாதா என்ன ? கலிங்கத்துப்

பரணியிலே வீரத்துக்குச் சான்று சொல்லவா வேண்டும்? கலிங்கத்துப் பரணியிலே தமிழனின் வீரப்பணி நன்கு எடுத்துரைக்கப் பட்டிருக்கிறது. கடினமான பிரதேசத்தைக் கைபபற்ற, வேழத்தை அனுப்பிக் கைப்பற்றியதாக, கலிங்கத்துப் பரணி கூறுகிறது, வேதங்களையோ வேதியர்களையோ அனுப்பவில்லை!

தமிழ் மன்னர்களின் தலையிலே மணிமுடி இருந்த பொழுது திராவிடநாடு மங்காது இருந்தது. போலிக் காரணங்களைச் சொலலி, திராவிடநாட்டைப் பிரிக்காமல் இருகக முடியாது

வீட்டுக்குச் சுவர்; நாட்டுக்கு எல்லை

வீட்டுக்கு வீடு சுவர், ஆற்றுக்கு ஆறு அணை, அமைத்திருப்பது பாகப் பிரிவினையால் அல்லவா. வீட்டுக்கு வீடு சுவர் தேவைப்படுகிறது அண்டை வீட்டுக்காரனுக்கு மத்தியிலே கதவிருந்தாலும், இரவிலே நெடுநேரமானதும் அண்டை வீட்டுக்காரன் நாம் படுக்கைக்குப் போகும் பொழுது ஏதாவது பேசினால் எல்லாம் நாளைக்காலைப் பேசிக் கொள்ளலாமப்பா என்று சொல்லிக்கொண்டே கதவைத் தாளிட்டுவிடுவதை நீங்கள் காணவில்லையா? வீட்டுக்கு வீடு சுவர் அவசியம் தேவைப் படுகிறபோது, நாட்டுககு நாடு எல்லையிருந்தால் அதில் தப்பென்ன? என்று கேட்கிறேன்.

வயலுக்கு வயல் வரம்பில்லையா? ஆகாய விமானத்தில் உயரப் பறக்கும் பொழுது ஒரே பச்சைப் பட்டாடை போலத் தெரியும் வயல்களையெல்லாம் பார்த்து, இவைகளெல்லாம் எங்களுக்கு ஒன்றாகத்தான் தெரிகிறது. இஷ்டப்பட்டவர்கள் அறுவடை செய்து கொள்ளலாம் என்று சொல்லிவிட முடியுமா?

பலாத்காரமின்றி பலன் காண்போம்

ஒரு வரப்பிலிருந்து மற்றொரு வரப்புக்குச் சென்று அறுவடை செய்தால், தடைசெய்ய அரசாங்கத்தாரின் சட்டம் இருக்கிறது. இல்லையேல் அரிவாள் இருக்கிறது. நாம் பலாத்காரமற்ற தன்மையில் திராவிட நாட்டைத் தரும்படி கேட்கிறோம்.

[library stamp]

'குத்தூசி' நீட்டினார் படித்தீர்களா?

ஹரே ராமா !
ஹரே கிருஷ்ணா!

- ✱ ஹரே ! ராமா ! ஹரே ! கிருஷ்ணா !
- ✱ அர்ச்சகருக்கு ஆண்டவன் துரோகம் !
- ✱ குசேலய்யருக்கு 10 லட்ச ரூபாய் !
- ✱ பிச்சம்மாள் பொன்னம்மாள் ஆனாள் !
- ✱ தியாகம் வாங்கலையோ, தியாகம் !
- ✱ மதப்பஞ்சாமிர்தம் தேவையா ?
- ✱ மாவிலையைப் போட்டுவைத்தால் ?

ஏழும் ஒரே புத்தகத்தில்

விலை அணா ஆறு

விற்பனைக் கழிவு 25% செலவு இனாம்.

மறுமலர்ச்சி நூல் நிலையம்

18, ஆயனூர் முத்தையா முதலி தெரு,

சென்னை - 1.